பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 99

01.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.சந்திரசேகரன், அலங்கநாதம் கிராமம், சேந்தமங்கலம் தாலுகா, நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் அலங்கநாதம் கிராமத்தில் அமைந்துள்ள பெரியசாமி கோயிலின் தர்மகர்த்தாவின் குடும்பத்தை சேர்ந்தவராவார். திரு.பெரியசாமி கோயிலுக்கு அருகிலுள்ள நிலத்தின் உரிமையாளரான திரு.ஆறுமுகம், கோயிலுக்கு சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்ததாக கூறியிருந்தார். இதையடுத்து ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி புகார்தாரர் கடந்த 2023ம் ஆண்டு வருவாய்துறை அதிகாரியிடம் மனு அளித்திருந்தார். புகார்தாரரின் மனு மீது எவ்வித நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால் புகார்தாரர் மாண்புமிகு உயர்நீதி மன்றத்தை அணுகினார். மாண்புமிகு உயர்நீதி மன்றம் மேற்கண்ட ஆக்கிரமிப்பை 12 வார காலத்திற்குள் (10.06.2026 முதல் 10.09.2026) அகற்ற சேந்தமங்கலம் வாட்டாட்சியருக்கு உத்தரவிட்டது. உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு 10.09.2026 அன்று வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் துறையினர் அடங்கிய வருவாய் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று ஆக்கிரமிப்பு அகற்றும் பணியை மேற்கொண்டனர், பணி முடியாத காரணத்தினால் 22.09.2026-க்கு பணி ஒத்திவைக்கப்பட்டது. பின் 23.09.2026 அன்று ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நிறைவேற்றப்பட்டது. திரு.ஜெயராமன், வருவாய் ஆய்வாளர், அலங்கநாதம் பிர்கா, நாமக்கல் மாவட்டம் அவர்கள் ஆக்கிரமிப்பு அகற்றும் பணியை நிறைவேற்றிய காரணத்திற்காக தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை நாமக்கல் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 01.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஜெயராமன், வருவாய் ஆய்வாளர், அவர்கள் ரூ10,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 99
01.10.2026

REVENUE INSPECTOR ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Chandrasekaran, a resident of Alanganatham Village, Sendhamangalam Taluk, Namakkal District, is one of the family members of the Dharmakarthas of Periyasamy Temple, situated at Alanganatham Village. Tr. Arumugam, the owner of the land adjacent to the Periyasamy Temple, had allegedly encroached upon a portion of the temple land. In 2023, the complainant submitted a petition before the Revenue Authorities seeking eviction of the encroachment. As no action was taken on the petition, the complainant approached the Hon'ble High Court. The Hon'ble High Court directed the Tahsildar, Sendhamangalam, to take action for eviction of the encroachment within 12 weeks, i.e., from 10.06.2026 to 10.09.2026. Accordingly, on 10.09.2026, a team of Revenue Officials comprising the Tahsildar, Deputy Tahsildar, Revenue Inspector, VAO and police personnel visited the spot and commenced eviction proceedings. As the work could not be completed on that day, it was postponed to 22.09.2026, for making adequate police protection arrangements. The eviction work was subsequently completed on 23.09.2026. Tr.Jayaraman, Revenue Inspector, Alanganatham Firka, Namakkal district demanded a bribe of Rs.10,000/- from the complainant for completion of work. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Namakkal detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (01.10.2026). During trap proceedings, Tr.Jayaraman, Revenue Inspector, demanded and accepted the bribe amount of Rs. 10,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.